**சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் நாள் செவ்வாய்கிழமை

**வழக்கிடை மனு எண்.01/2025 in அசல் வழக்கு எண்.556/2024**

பன்னீர் ......மனுதாரர்/வாதி

/எதிர்/

ஏழுமலை ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 18.11.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.வினாயகம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜெ. நேதாஜி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களை அனுசரித்து வாதி தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி உ.வி.மு.ச. கட்டளை VII, விதி. 14(3) உ.வி.மு.ச -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்-**

தான் இம்மனுவின் மனுதாரர் என்றும், மேற்படி வழக்கில் வாதி என்றும், மனுவில் கண்டுள்ள ஆவணம் இந்த வழக்கிற்கு அவசியமான ஆவணம் என்றும், இந்த் ஆவணம், ஆவணங்களுடன் கலந்துகொண்டதால் உரிய காலத்தில் மனுவில் கண்டுள்ள ஆவணத்தைக் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், தற்போது தான் ஆவணம் கிடைக்கப்பெற்றதாகவும், தற்போது தாக்கல் செய்வதாகவும், மனுவில் கண்டுள்ள ஆவணத்தைத் தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதாகவும், அந்த காலதாமத்தை மன்னித்து ஆவணத்தை ஏற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமானது என்றும், இல்லையேல் தனக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு நேரிடும் என்றம், எனவே மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அதனை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:-**

மனுதாரர் மனு சட்டப்படி செல்லாது என்றும், சங்கதிகள்படி உண்மை இல்லை என்றும், மனுதாரர் சார்பில் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டில் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை என்றும், மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதியை அலைகழிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை எடுத்தியம்பி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தெரிவித்துள்ள சங்கதிகளான மனுவில் கண்டுள்ள

ஆவணம் இவ்வழக்கிற்கு அவசியமான ஆவணம் என்றும், இந்த ஆவணம் ஆவணங்களுடன் கலந்துவிட்டதால் உரிய காலத்தில் மனுவில ஆவணத்தை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும், மனுவில் கண்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ள சங்கதிகள் அனைத்தும் மனுதாரரால் மனுவிற்காக புனையப்பட்ட பொய்யான சங்கதிகள் என்றும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தைப் பற்றியோ, ஆவணத்தின் தன்மை குறித்தோ, எதிர்மனுதாரருக்கு எவ்வித விவரமும் தெரியாது என்றும், மனுதாரரே ஆவணத்தை பற்றி நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், எனவே, மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது பிரச்சனை யாதெனில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.**

(i) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக வாதி, பிரதிவாதி மீது வழக்கு தொகையைப் பெற வழக்கு தொடர்ந்துள்ளார். மனுதாரர் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் தற்போதுதான் கிடைக்கப்பெற்றன என்றும், வழக்கிற்கு மிக முக்கிய ஆவணம் என்பதால்,

காலதாமதத்தை மன்னித்து தற்போது அந்த ஆவணத்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே ஆகும். எதிர்மனுதாரர் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில், எதிர்மனுதாரர் மீது வீண் வழக்கை தாக்கல் செய்து அலைக்கழிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் இம்மனுவை தற்போது தாக்கல் செய்துள்ளார் என்றும், இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்பதே ஆகும்.

(ii) அசல் வழக்கின் வாதி தான் சார்ந்திருக்கும் ஆவணத்தை பிராதுடன் தாக்கல் செய்யவெண்டும். அதேபோல் அசல் வழக்கின் பிரதிவாதி தான் சார்ந்திருக்கும் ஆவணத்தை எதிர் வழக்குரையுடன் தாக்கல் செய்யவேண்டும். அசல் வழக்கில் வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்யாத ஆவணங்களை இந்நீதிமன்ற அனுமதியுடன் பின்னிட்டு தாக்கல் செய்ய வழிவகை உள்ளது. எனவே இந்த ஆவணத்தை பெற்றுக்கொள்ளாமல் போனால் வாதியின் தரப்பிற்கு குந்தகம் ஏற்பட்டு விடும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. எனவே மேற்சொன்ன ஆவணத்தை தாக்கல் செய்ய அனுமதிப்பதற்கு சட்டத்தில் எவ்வித தடையும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மனுதாரர் தரப்பில் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் தன்மை, சாட்சிய மதிப்பீடு மற்றும் வழக்குக்கு சம்மந்தப்பட்டதா போன்ற விவரங்கள் குறித்து வழக்கு விசாரணையின் போதும், தீர்ப்பின் போதும் தீர்மானிக்கப்படும். எனவே அவைகள் குறித்து ஆழமாக ஆராயாமல் ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணத்தை பெற்றுக்கொண்டு, இம்மனுவை

அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு கானப்படுகிறது.

**முடிவாக:-**

இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.11.25 16:38:58 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்-இல்லை

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.11.25 16:39:04 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.